ZEENILOGAN

எவ்வளவுதான் இழந்துவிட்டபோதும்,
பெறுவதற்கும் ஏதோ.......
இருந்து கொண்டே இருக்கிறது......
ஆம்! இது பெரிய உலகம்.

கலை, இலக்கிய சிந்தகள் இதழ்.


01. 6 .87

6

P. BOX .101535,
4040, NEUSS .1,
W. GERMANY.

# மக்களே தெய்வங்கள்
# மலரும் புது உலகம்

புதிர் - 01 கதிர் - 06



விமர்சனங்கள்
உளசுத்தியோடு
வரவேற்கப்படுகின்றன

★

அவை, உயர்த்தும்
படிகள் என்பதில் அசை
யாத நம்பிக்கை உண்டு.

★

விமர்சனங்கள்; விடய
தானங்கள்; விருக்கள்; விண்
ணப்பங்கள் யாவும் ....

★

மாதந்தோறும் 20ம் திகதிக்கு
முன்பாக அனுப்பிவைக்கவும்.

★ நன்றி -

- ஆசிரியர் -

பிறந்ததும்* தாயும் மகிழ்ந்து துளியது

# பணம்தான் சரிவு என்றாற் பக்கபலம் நாம் தருகிறோம்

— ஆசிரியர்

நானும் எழுதவென்று ஆரம்பித்தேன்....

இவனும் ஏதோ சொல்கிறான் பார்ப்போம் என நீங்களும் சில நிமிடங்கள் நின்றீர்கள்!

எமக்கிடையே ஒரு பாலம் உருவாகிவிட்டது.

.......

உண்மைகளை உருக்குலைப்பதற்கெனக் கங்கணம் கட்டிக்கொண்டு வந்த காகிதக் குப்பைகள் பல....

அச்சுப் பதித்த பக்கங்கள்...

அழகிய வர்ணப் படங்கள்...

விற்பனை முகவர்கள்....

.........

இவை எதுவுமே இன்றிக் கையெழுத்துப் பிரதியாக வெளிவந்து கொண்டிருக்கும் 'அறுவை' தனக்கென ஒரு தனி இடத்தினை இலக்கிய விரும்பிகள், அரசியலனுதாபிகள் மத்தியில் ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

.......

நானும் ஒரு எழுத்தாளன் என்று முத்திரை குத்திக் கொள்வதல்ல இந்த எழுத்துப்பணிக்குள்ள சமூகப் பயன்?

இதுவே எனது அளவுகோல்....

வழமையாகவே உண்மையைக் கூறப்புகும் பத்திரிகைகளைக் கைதிகளாக்கி முன்னேற்றத்தை நெருங்கவிடாமற் காவல்காக்கும் 'பொருளாதார முடை' எனும் சிப்பாய்கள் 'அநுவை'யையும் காவலில் வைத்துவிட்டது என்னவோ உண்மைதான்...!

......

1.6.87 எனும் திகதி இடப்பட்ட போதும் அத் திகதிக்கான 'அநுவை' சுமார் ஒரு திங்கள் பிந்தி வருகின்ற துர்ப்பாக்கியம் நிகழ்ந்துவிட்டது.

.......

அநுவைப் பணங்கள் வேகமாக வந்து சேர்ந்தன!

நிறுத்திவிட வேண்டாம் எனக் கடிதங்கள் நிறைந்தன.

"பணம்தான் சரிவு என்றால் பக்கபலம் நாம் தாறோம்" என்றனர் ஒரு சில அநுதாபிகள்.

..........

இவை ஒரு புறம்....

"தரமற்ற அரசியல் இயக்கங்களுக்குப் பணம் கொடுத்துத் தமிழனின் விடுதலையைப் பின்தள்ளி எதிர்ப்புரட்சிக்குக் காரணமாகிவிட்ட எமது கைகளை அந்தச் சேற்றிலிருந்து அகற்றுவதற்கான தெளிவையும், துணிவையும் தந்துவிட்ட 'அநுவை'யே உனக்கு நன்றி. உனது போக்கில் நீ சரியான ஒரு பாதையைக் காட்டவும் எமது பங்களிப்பை அங்கு நல்கவும் நாம் என்றும்

தயாராகவுள்ளோம்".....

இப்படி ஓர் மடல் இருபதுக்கு மேற்பட்டவர்கள் கையெப்பமிட்டு வந்து சேர்ந்தது.

இதே கருத்துடன்......

எதிர்பார்ப்பின் ஏக்கத்துடன்....

..........

எண்ணற்ற மடல்கள்...!

இவை தினமும் உறுத்தின.

..........

இந்த ஒரு மாத இடைவெளிக்குள் எனது அளவுகோல் நிமிர்ந்து நின்றது. எழுதுகோல் 'எழுந்து வா' என்றது.

..........

பூனையின் நரம்புகளிற் கூட...

யானையின் இரத்தத்தை....

ஏற்றுகின்ற வலிமை.....

இலக்கிய சேவைக்கு உண்டு.!

.......

இந்த உண்மையை உணர்ந்து கொண்ட பெருமிதமும்,.....

வித்தியாசமான பார்வையில் மனம் உயர்கின்ற இலக்கியம் படைத்துக் கொண்டு இலைமறை காய்களாக இருந்த இளம் எழுத்தாளர்கள்......

சுசீந்திரன், பார்த்திபன், சிவபாலன், மயூரன்....!

இவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தோம் எனப் பெருமையடித்துக் கொள்ளாமல், அவர்களை உங்களுக்குக்

காட்டிவிடுவதற்காகவும், கிடைத்த சந்தர்ப்பத்திற்காகப் பெருமைப்பட்டுக் கொண்டேன்.

..........

ஆம்!

என்னை நீங்கள் படம் போட்டு எடுத்துவிட்டீர்கள்!

இனிமேல்...!

எந்தக் காரணமும்....

அருமையின் தாமதத்தின் தடைக்கற்கள் ஆகா!

..............

இலக்கியமும் - கலையும் வாழ்ந்து கொண்டிருக்கும் வர்க்கப் பாதிப்புக்கு உட்பட்டவை...!

ஏனைய விடயங்கள் போலல்லாது மனம் எனும் எண்ணக்கருவோடு சம்பந்தமுடையவை.

ரசனைபூர்வமான இந்தக் கலை - இலக்கிய சேவை உண்மையோடிணைந்தே செல்லவேண்டும்....!

நேர்மையான வர்க்கத்தின் கலைகள் நிச்சயம் நேர்மையாக இருப்பதால் அது மக்களைக் கவரும்...!

...........

உங்கள் மடல்கள் மூலம் நான் கற்றுக்கொண்ட உண்மைகள் இவை.

எனவே வாசகர்களே ஒரு முறை மட்டும் மன்னித்துவிடுங்கள்.....தாமதம் இனிமேல் வராது!

'நல்ல எழுத்தாளன் அல்லது நல்ல கலைஞனிடம் பொய் பிறவாது' என்பதற்கிணங்க முயற்சிக்கிறேன்.

- நன்றி -

# கவிதைப் பூங்கா

இப்பூங்காவிற் காணும் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விடுதலை இயக்கத்தை பிரதிபலிக்கின்றன.

எந்தக் கவிதை எந்தவிடுதலை இயக்கத்தைப் பிரதிபலிக்கின்றது என்பதை ஊகித்து கவிதைகளுக்குரிய தலைப்பை அவற்றின் பெயர் இட்டு எமது முகவரிக்கு அனுப்பிவைப்பின் அதற்கான சன்மானமுண்டு. முற்றும் சரியான கணிப்பிற்கு சன்மானம் வழங்கப்படுவதுடன்.....பெயர்கள் பாதுகாப்பாகவும் வைக்கப்படும்.

## எமது விடுதலை......

① ?

..................

கசாப்புக் கடையை....
மறைப்பதற்கான திரையிற்
'கருணை மாளிகை'
எனப் பெயர் பொறித்தவர்கள்.
வரலாற்றின் கிடங்கில்
இவர்கள்...
விடம் கலந்தபோது....
வரலாறே அதை...
நேரிற் கண்டதாற்
தப்பித்துக்கொண்டது..!

② ?

..................

விடியலின் விளக்கை
இருளுக்கு விற்று விட்டு,
விட்டிலைச்
சூரியன் என.....
நம்பும், வெறுமைகள்...!
இதனைத்தான்...
மக்களையும்...
நம்பும்படி...
சொல்கிறார்கள்.

③ ..............?

மறக்கமுடியாமல்....
மாமனிடம்
சோரம் போனவள்...!

④..............?

மரித்துப் போன....
பிருதிவியின் பாதி இதயம்...
மறுபடியும் துடிப்பதற்கு...
உஷ்ணத்தை
உற்பத்தி செய்பவர்கள்...!
தீயின் நாவு....
இரண்டுபட்டாலும்...!
இருமையைச் சுடுவதற்காக...
மேல் நோக்கி எரியும்..!
யுக நெருப்பாகவே!
தம்மை அரசியலில்
வளர்ப்பவர்கள்.

⑤

எல்லோரையும் போலவே
இந்த இளைய சகோதரனும்
வீட்டில் எடுத்தபோது...!
"தலை மீறுக்கு"
வந்த சமரில்,
தாயிடமிருந்து.....
தலைமையுடன் பறிக்கப்பட்ட
தளிர்!

⑥..............?

உரக்குவியலின்,
செங்கீரை நாற்றுக்கள்...!
உண்ணமுடியாத
மிருகமொன்றில்...!
உருக்கொடுக்கப்பட்ட
அந்த வேதனையிலும்...!
வேர்களில் நம்பிக்கையுண்டு!

"தோணி போகும் துறை நிற்கும்"
(மக்களே நிரந்தரமானவர்கள் அதிகாரிகள் அல்ல என்பதை விளக்கும் ஒரு கிராமியப் பழமொழி).

# கருத்து மோதல்

---

## திருமணத்திற் சிறந்தது நிச்சயதார்த்தம்

- பத்மனீ பசுபதி -

மனிதன் ஒரு சமூக விலங்கு, அவன் வென்றித்த சமூக வாழ்வுக்கும் சமூகக் கட்டுக்கோப்புகளுக்கும் கட்டுப்பட்டுத்தான் சமூகமான வாழ்வுச் சுகங்களை அநுபவிக்க முடிகின்றது.

என்றோ வரப்போகின்றதான கற்பனைச் சுகத்தை வைத்துக்கொண்டு பார்க்கும் சொர்ப்பனத்தை மறந்து, இன்றுகாணும் சுகத்தை நோக்குவோம்.

அன்றைய அம்பிகாபதி-அமராவதி தொடக்கம் நவீன தேவதாஸ் - பார்வதி வரை இளமையின் மிடுக்குகளால் கவரப்பட்டதுதான் காதல் என்று சொல்கின்றன.

இளமையின் இச்சைகள் பரிமாறப்பட்ட பின்பு....

வயிற்றில் சுமை, வாழ்வில் சுமை, கண்ணீர்க் கோலங்கள், சாவின் உணர்வலைகள் தான் காதலின் பரிசாகக் கிடைக்குமாயின்.....

வாழ்க்கை 'வாழ்வதற்கே'தான் என்பதை உறுதிப்

படுத்தி ஆசி வழங்கும் பெரியோர்கள் நிச்சயிக்கும் திருமணங்கள் சிறப்பானவையே.

காதல் வெறும் கற்பனையில் வளர்க்கப்படுவது ...!

இது நிஜவாழ்வின் உண்மைகளை மறைப்பது ...!

அடையமுடியாதவைகளில் அதிகமான ஆவலை ஏற்படுத்திப் பலவீனமான இதயங்களையும் மூளைகளையும் இழப்புக்குட்படுத்துவது.

காதல் அடைந்துவிட முடியாத போது தற்கொலைகளையும், அடைந்து விட்டுக் குடும்பச் சூறையாடப்பட்ட பின் சில கொலைகளையும்கூட சந்திக்க வைக்கும் சமூகநோய் காதல்.

பெற்றோர், சுற்றம், சூழல் எல்லோரது வெறுப்புக்கும் ஆளாகிக் கொண்டு வாழ்வைத் தொடரும் காதல், வாழ்வில் வருகின்ற இன்னல் யாவும் அவர்களையே தாக்கிப் பிணைப்பைப் பிரித்து.... வழக்கு-கணக்கில் நிற்கும் காதலர்களையும் அநுபவம் கண்டிருக்கிறது.

ஆணுக்கோ, பெண்ணுக்கோ அழகிய - கவர்ச்சிகரமான இளமைகளில் காணுபவர்களிடம் ஏற்படுகின்ற இந்தக் காதல், வெறும் தனிமையில் அழகில்லாத எதிர்ப்பாலிடம் கூட ஏற்படுகின்றதே!

எனவே காதல் என்பது 'காமம்' தான்.

உடல் பொருத்தங்கள் இணைந்து போவதும், பொருளாதாரக் கஷ்டங்கள் இல்லை எனத்தாக்காவண்ணம் பார்ப்பதும். ஒருவரை ஒருவர் தாழ்வாக நோக்காவண்ணம் சம அறிவு, சம அழகிற் சோடிகளை இணைப்பது என்பது அவர்கள் தொடர்ந்த நல்வாழ்வுக்காகவேயாகும்.

இத்தகைய இணைவுகளை அலசி ஆராய்ந்து செய்யக் கூடிய திருமணம் நிச்சய

தார்த்த மணம் மட்டுமே!

'காதலுக்குக் கண்ணில்லை.' அது இவைகளில் எதையுமே பார்ப்பதில்லை. அதன் பிரதான நோக்கம் நிறைவேறிய பின் இல்லாதவைகளை எல்லாம் பார்க்கிறது ..... பிரிகிறது.

நிச்சயதார்த்தத்தில் பிரிவுக்கான சகல காரணங்களுக்கும் வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

ஒரு பெண்ணும் ஆணும் சந்திக்கும் சந்தர்ப்பம் காதலை உருவாக்குமாயின்......

அது நிச்சயதார்த்தத்தின் பின் ஏற்பட்டுக் கொள்ளட்டுமே.

எது எப்படியோ எனது வாதம் நிச்சயதார்த்தத் திருமணமே சிறந்தது என்பதாகும். உங்களதும், நடுவரதும் அனுபவமும் இதுவாகட்டும்.

# காதல்

- ஜி. கௌரி -

காதல் என்றவுடன் முகத்தைச் சுழிப்பவர்கள் ஒவ்வொருவரும் நிச்சயமாக அவர்களது வாழ்க்கைப் புத்தகத்தில் அந்தப் பக்கங்கள் எழுதப்படாதவர்களா?

இல்லவே இல்லை.

99%மான மனித உணர்வுகள் இந்தத் தோட்டத்தில் தேன் குடித்தவையே!

காதல் என்பது தூய்மையானது, இனிமையானது, ரசனைக்குரியது ....!

எதிர்த்தரப்பினர் சொல்வதுபோல வெறும் தசை ஆசையாக இருந்தால் ....?

ஆண் - பெண் உறவு, என்பதற்கும் மேலாக நோக்கிப் பார்க்கவல்ல எத்தனை சிறப்புகள் காதல் வழங்கியவை.

எத்தனை தியாகங்கள், உலக அதிசயங்கள், அறியாத காவியங்கள், சரித்திரங்கள் இவை எல்லாம் வெறும் பாலு ணர்வுக்கு என்றோ பலிபீடத்தில் வைத்தவைகளா?

நெஞ்சை நெகிழவைத்து விழியூடே நுழைந்து இதயத் தின் தந்திகளை மீட்டி, இனிய ராகம் இசைத்து...

ஒருவரில் ஒருவர் உட் புகுந்து வாழும் தூய அன்ப ல்லவா காதல்.

பூரணமாக ஒருவரை ஒரு வர் உணர்ந்து கொண்ட இரு வர் பங்காளிகளாகும் ஒரு ஒப்பந்தமா அல்லது அறிமுகமே இல்லாத இருவர் அருவருப் போடும் சந்தேகத்தோடும் இணையும் ஒப்பந்தமா சிறந் தது என்பது நான் சொல்லித் தானா இவர்கள் தெரிந்துகொள் ளவேண்டியவை.

பணம், அழகு, அந்தஸ்து, சாதி, படிப்பு, தாய்மை....

இப்படி எத்தனையோ விடயங் களைத் திருமணம் செய்துகொண் டபின்னர்தான் மாமன்-மாமி தன் பிள்ளையைத் திருமண ஒப்பந்தக் கைசாத்துக்கு அனு மதிக்கிறார்கள்.

விற்பனையாகிய விளங் கொன்றைப் பிடித்துக் கையிற் கொடுப்பதுபோலத்தான் நிச் சயதார்த்த மணங்கள் நடை பெறுகின்றன.

80%ற்கு மதிகமான எமது சமூகத் திருமணங்கள் கட்டாயமணங்களாக இரு ப்பது நாம் கண்ட அனுபவம்.

'கல்லென்றாலும் கணவன்' எனக் கட்டிக்கொள்ளும் ஏழைப் பெண்ணும், 'மண்ணென்றாலும் மனைவி' என வாழ்வதற்கென சீதனத்திற்கு விற்கப்பட்ட கண வனும் கூட, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே!

இன் விவாகரத்துப் புள்ளிவிபரங்களின் படி நிச் சயதார்த்தத் திருமணங்களே

அதிகமாக உடபடுத்தப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

'காதல் குருடு' என்கிறார்கள். இல்லை..! காதலின் அந்தத் தூய்மையான ஒளியின் முன்னே எல்லாப் பேதங்களும் குருடாகிவிடுகின்றன.

உலகமே ஓர் இனம் என்ற உண்மையை அறிவியல் வளர்ச்சி தரமுடியும் அதே போல உணர்வுபூர்வமான காதலும் உணர்ந்து கொள்கிறது. எனவே...

காலத்தாலழியாத காதல் வாழ விடுங்கள்.

தம்மைத் தாமே புரிந்து கொண்டு தமது வாழ்வுப் பாதையை அமைத்துக் கொண்டு வாழ வழிவிடுங்கள்; சுதந்திரம் கொடுங்கள்.

ஏமாற்றுகின்ற அல்லது பலவீனத்தையோ, சந்தர்ப்பத்தையோ பயன்படுத்துவதை எல்லாம் காதலென்று, காதலுக்கு மாசு புகட்டவேண்டாம்.

# குமரனின் தீர்ப்பு

நமது சமுதாயத்தில் ஆண் - பெண் உறவில் காணப்படும் சமுதாயப்பாதிப்புக்களையும், அவற்றிடையே முகிழ்த்துக் கிளம்பும் புதிய சிந்தனைகளையும் முற்போக்கு நோக்குகளையும் பின்னணியாகக் கொண்டே வாதப்பிரதிவாதங்களை அணுகவேண்டியுள்ளது.

காதல் என்பதை வெறும் மனக்கிளர்ச்சி அல்லது எதிர்ப்பால் நாட்டம் என்றுமட்டும் கொள்ளாமல் சமுதாய அங்கத்தவர் இருவர் பரஸ்பரம் புரிந்துகொண்டு, தம்மையும் தமது சமுதாயப் பங்களிப்பையும், சரிவர ஆற்றுவதற்கான ஒரு

வாய்ப்பாகவே காணவேண்டியுள்ளது.

'பெரும்பாலானகாதலர்கள் பிற்காலத்தில் மன முறிவுக்கு உட்படுகின்றனர்' என்ற வாதம் உண்மை எனினும் சமுதாயப் பாதிப்புக்களைக் கருத்திற் கொள்ளுமிடத்து அது காதலின் குறைபாடல்ல.

நிச்சயதார்த்த மணங்களை நிச்சயிப்பவர்களின் விருப்பை முதன்மைப் படுத்து மணவுக்கு வாழப் போகிறவர்களின் விருப்பை முதன்மைப்படுத்துவதில்லை.

இவர்களாற் சுமுகமாக வாழமுடியும், மணமான பின் கணவன் - மனைவி காதலிக்கலாம் என்ற வாதத்திலும் உண்மையிருந்தாலும், இன்று நடைபெறும் நிச்சயதார்த்தங்கள் புரையோடிப் போன புண்களையுடைய இந்த சமுதாயத்தின் அஸ்திவாரத்திலேயே கட்டப்படுவதால்.....

நாளைய சமுதாயத்தில் இவர்கள் எப்படி அமைவார்கள் என்ற கேள்வியானது.

இத்திருமணமுறையில் வெறும் சுயநலமே வளர்க்கப்படுகின்றது என விடைதருகின்றது.

எனவே இருபக்க வாதங்களையும் தீர ஆய்தம் போது இன்று நாம் சமுதாயத்தில் மாற்றம் செய்ய நினைக்கின்றதான சாதி, சீதனம், பெண்ணடிமைத்தனம் போன்றவற்றை அப்படியே பேணுகின்ற அல்லது அவற்றுக்குத் துணைபோகின்ற நிச்சயதார்த்தத்தைவிட, தமது சுதந்திரத்தோடு தக்க துணையோடு வாழ்ந்து, சமுதாய மாற்றங்களைச் சந்திக்க வேண்டிய விதத்திற் சந்திக்கும் துணிவைப் பெற உகந்ததான காதல் திருமணமே

சிறப்பானது என்பதே எனது முடிவாகும் எனத் தீர்ப்பு வழங்கும் அதேவேளை புறநிலைக் காரணிகளான பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரச்சனைகள் காதலோடு போட்டியிடும் போது, காதல் தோற்றுவிடாமலிருக்கமுடியாமற் போவதுமுண்டு. எனவே உண்மையான தூய காதலும் கூட வர்க்க பேதம் கடந்த ஒரு சமுதாய அமைப்பிலேயே காணமுடியும்.

# உங்களுக்கு தெரியுமா?

மாரிகாலங்களில் முகில்கள் குழாய்போன்று கடலிற் தொட்டுக் கொண்டிருப்பதைக் கண்டிருப்பீர்கள். இச் செயற்பாட்டைக் 'கிறான்' தண்ணீர் எடுக்கிறது என்று சொல்வார்கள். அதைத் திரும்ப அப் பகுதியில் மழையாகப் பெய்து விடுவதாகவும் பலரால் நம்பப்படுவதுண்டு. கடல்நீரை எடுப்பதோ, கடல்நீரை நன்றாக்குவதோ முகிலுக்கு முடியாதகாரியமல்லவா?

உண்மை என்னவென்றால் இது 'Renoda' எனப்படும் ஒருவகைப் புயலாகும். இதன் போது முகில் குழாய் போன்று இறங்கும், அமுக்க வேறுபாட்டால் அங்கு மழையும் பெய்யலாம். இது தவிர கடலிலிருந்து நீராக ஒரு துளிகூட மேலே செல்வதில்லை.

— திரு. K. ஜெயக்குமார் —

# அரசியல் 5

## மாதன முத்தாக்கள்

ஐரோப்பிய நாடுகளில் வாழும் அத்தனை அரசியல்முகவர்களையும் இப்படியான ஒரு பொதுத் தன்மையினூடேதான் காணமுடிந்தது.

பல்வேறு வேறுபாடுகளினூடே கண்ட இப்பொதுத் தன்மை 'பணம்' என்ற ஒன்று மட்டும் தான்.

பிரச்சாரகர்கள் எனச் சிலர் ஒவ்வொரு மேற்கு நாடுகளிலும் அதன் பகுதிகளிலும் காணப்படுகின்றனர்.

இதுவரை பெரும்படியான முன்னணியில் நின்ற மூன்று இயக்கங்களிலும் இந்த நபர்களே ஒரே தன்மையுடனேயே காணமுடிந்தது.

அனேகமான பிரச்சாரகர்களிடமிருந்த பிரதான குறைபாடு என்னவெனில் அவர்கள் ஒரு அமைப்பு நடைமுறைக்குள் அமைந்து, தமது பிரச்சாரத்தின் நோக்கமென்ன, பிரச்சாரத்தின் போது தாம் சந்திக்கும் பிரச்சனைகளும் அவற்றுக்கான தெளிவான அரசியற்தீர்வு என்ன என்பதையும் தெரிந்துகொள்வதில்லை.

ஸ்தாபன அமைப்பாக இல்லாமல், ஸ்தாபனக் கமிட்டி ஒன்றிடம் பொறுப்பாக இல்லாமல் தனிநபர்களின் பொறுப்பில் நிர்வாகம் விடப்பட்டிருப்பதான இக்குறை

பாடானது மேற்படி இறை பாட்டுக்கும் காரணமாகி விடுகின்றது.

பொறுப்பாகவுள்ள தனிநபர் மட்டும் அல்லது அவரை விசுவசிக்கும் சிறு குழுவினர் உட்பட முடிவெடுத்து.....

நன்றாகப் பேசத் தெரிந்தவர் அல்லது அதட்டத் தெரிந்தவர், அல்லது அப் பகுதியில் செல்வாக்குப் பெற்றவரான ஒன்றிரண்டு பேர்களைப் பிரச்சாரகர்களாகக் கொண்டு திரிகின்றனர்.

இந்தப் பிரச்சாரகர்கள் நிஜவாழ்வில் எப்படியானவர்கள் இவர்களை முன்னுதாரணமாக மக்கள் முன் நிறுத்தும் தகுதியுண்டா, தாம் வேலை செய்யும் விடுதலை ஸ்தாபனத்திலோ அல்லது உண்மையான தமிழ் விடுதலையிலோ மனப்பூர்வமான பற்றுதலும், எந்த சந்தர்ப்பத்திலும் நாடு திரும்பும் மன உணர்வும் உடையவர்களா என்பது கேள்விக்குறி!

நான் சந்தித்த மிகத் தீவிரமான பிரச்சாரகர்களில் அநேகமானோர் தமது சுற்றத்தார் எல்லோரையும் மேற்கில் இருத்திவிட்டவர்களே!

அதுவோ என்னவோ தமது பிரச்சாரம் ஏற்படுத்தும் விளைவுகள் இன்றும் நாளையும் எத்தகையது? எனவே இதை நாம் எப்படிக் கையாள வேண்டும்? எமது பிரச்சாரத்தின் முழுமையான பயன்பாடு தாயப்பிரதேசத்தின், எமது உரிமைகளின் மீட்புக்காக என்றே அமைய வேண்டும் அங்குள்ள அழிவுகளையும் இயன்றவரை தவிர்த்துக் கொள்ளவும் பயன்பட வேண்டும் என்பவைகளை இவர்கள் சிந்தித்துச் செயற்படுவதே இல்லை.

திரும்பியோ திரும்பாமலோ பிரச்சனையைக் காரணமாக்கி வெளிநாடுகளுக்கு வந்துவிட்ட இலங்கைத்தமிழர்களின் 'அகதி' வாழ்வு எப்படியானது என என்னிடம் யாராவது கேட்டால்.....

வெள்ளையர்களுக்குக் காறித்துப்பத் தெரியாதது இவர்களுக்கு வரப்பிரசாதம் என்றுதான் சொல்லுவேன்.

இவர்களை இந்த அரசுகளும், பொலிஸாரும் மதிக்கின்ற மாதிரியும், மக்கள் மத்தியில் அரசும், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், அந்தந்த நாட்டு நேரடியோ செய்திகள் என்பன பிரச்சாரப்படுத்தும் முறைகளும் பார்த்தால் முகத்தில் காறித்துப்பாத குறைபாடு மட்டும்தான் மீதமாயுள்ளது.

இப்படியான செயற்பாடுகளையும், சிங்க- அரசியல் நடைமுறைகளையும் நுணுகி ஆராய்ந்து அவைகளை அவ்வப்போது மக்களுக்கு எடுத்துக்காட்டி.....

இரவல் மண்ணின் நிறைவுப் போலிகள் என்றுமே எமது மண்ணின் குறைபாடுகளுடன் கூடப் போட்டியிட முடியாதவை என்று விளங்கவைத்து.....

மக்களிடம் தேசிய உணர்வையும் தேசம் திரும்பும் எண்ணத்தையும் வளர்த்துவிட வேண்டியவர்கள்; இதை எந்தச் சந்தர்ப்பத்திலும் தொட்டுப்பார்த்ததே கிடையாது.

சராசரிப் பணவருவாய் ஒவ்வொரு பகுதியிலும் எவ்வளவு என்ற கணிப்பீடு மட்டும் மனப்பாடம்.

இந்த வருவாய் குறைந்துவிட்டால் மட்டும், உடனடியாக அந்தப் பகுதியில் ஒரு பிரச்சாரக்கூட்டம் நடைபெறும்.

அதிலும் எதிர்த்துக் கேள்விகள் கேட்போர் அவரது கருத்துக்களை விமர்சிப்பவர் இருந்தால் அங்கு அடிக்கடி கூட்டம் போட மாட்டார்கள், அப்படிப் போட்டாலும் குண்டர் தடி, சைக்கிள் 'செயின்' சகிதம் இயக்கக் 'கார்'கள் இயங்கிச் செல்வது வழக்கமென அறிந்தேன்.

சாதி, சமயப் பிரிவுகளில் எப்படிப் பாட்டாளி மக்களைக் கூறுபோட்டு வைத்திருக்கிறார்களோ அதே நிலை இன்று இயக்கமானவையின் மூலமும் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு இயக்கத்தினதும் பிரச்சாரப் (பணம் சேர்ப்பு) கூட்டத்திற்குச் சென்றுவிட்ட பொதுமக்கள் கலந்துகொள்கின்றனர்.

பிரான்ஸ், லண்டன் போன்ற நாடுகளிலும், ஜேர்மனியில் வேலைவாய்ப்புள்ள நபர்களும் இப்படியான கூட்டங்களிற் கலந்துகொள்வது மிகக் குறைவு.

எனவே இவர்களிடம் பணம் பிடுங்குவதற்கெனப் பத்திரிகைகளைக் கொண்டு அவர்களது வீடு (இரவல்) களுக்கு செல்வது வழக்கம்.

அவையும்....

பணம் கொடுக்காத ஒருவரிடம் அல்லது மாற்று இயக்க நபரிடம் செல்வதே இல்லை.

இலவச துண்டுப்பிரசுரங்கள் கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

இதனை குண்டுச் சட்டிக்குள்ளே குதிரை ஓட்டுகின்ற நடவடிக்கையை மட்டுமே இவர்கள் செய்து விட முடிகின்றது.

மேற்கு நாடுகளில் விநியோகிக்கப்படும் காவிதா

திகளாக இருந்தாலென்ன, பிரச்சாரகர்களாக இருந்தாலென்ன.

தமது நோக்கம், போராட்டம் செல்லவேண்டிய பாதை, மக்களின் அறிவுபூர்வமான புரிந்து கொள்ளலும் - இணைந்து கொள்ளலும், மக்களை அரசியல் மயப்படுத்தல் என்பவைகளை மறந்து.

......

ஒன்றை ஒன்று தாக்கி எழுதுவது. ஒன்றின் பலவீனத்தை மற்றைய இயக்கங்கள் பலமாக்க முனைவது. நிபந்தனை அற்ற ஆதரவு வழங்குவதன் மூலம் பிழை-சரி தெரிந்துகொள்வதற்கு முன்னரே எமது ஸ்தாபனம் செய்தது சரிதான் எனப் பிரச்சாரம் செய்யப்புறப்படுவது. போன்ற கொடூரமான சகிக்கத் தீமைக்குக் காரணிகளாக இவர்கள் இருந்துவருகின்றனர்.

இவர்கள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் 'செய்தி நடுவங்கள்', 'வீடியோ கசட்டுக்கள்' என்பனவும் சர்வசாதாரணமாக மக்களிடம் இடம்பிடித்துவிட்டன.

இவைகளின் சமூகத் தாக்கம் பற்றியோ இந்த வகையான மாயைக்குள் மக்களைத் தொடர்ந்து வளர்ப்பது சரியானதா என்பது பற்றியோ சிந்திப்பது இடையவே கிடையாது.

(தொடரும்...)

**பாரதி**

ஒரு;
வாலிப எரிமலையின் குழம்பு
கொடுமையின் முகத்தில்
கொதித்து
விழுந்தது...!

- கவிஞர் வைரமுத்து -

* * *

சிறுகதை:

# அவன் அவராகிறார்

பார்த்திபன்

மாலை ஆகிக்கொண் டிருக்கின்றது.

வெளிச்சமும், வெப் பமும் இணைந்து சேவை யாற்றிக் கொண்டிருந்தன.

.....

"என்ன வழி?"

இதுவே அவனுடைய யோசனை.......

இதையே தேடி அவனுடைய மூளை நரம்பு கள் முழுமூச்சாக ஈ·டுபட் டுக்கொண்டிருந்தன.

'சாரம்!..., மேலிரு ந்து கீழாகப் பயன்படுத்தும் பாடாத மூன்று 'பொத்தா ன்கள் தவிர ஏனையவை பொருத்தப்பட்டதான ஒரு 'சேர்ட்'

பாதை ஓரமாக நின்ற ஆலமர விழுதுகளில் அவன் அமர்ந்திருந்தான்.

அரும்பு மீசை வளர்ந்திரு ந்த தலைமுடியினுள் காதுகள் காணாமற்போயிருந்தன.

மாடு ஒன்று தனது எசமானைத் தேடிப் பாதை யில் நின்று கொண்டிருந்தது.

அவனைப் ஸ்பரிசிப்பத ற்கென ஆலம் கிளைகளைத் தாண்ட முயன்ற வெயில் தோல்வி அடைந்தது.

பாதையைப் பலர் தமது தேவைகளுக்கெனப் பயன்படுத்

திக் கொண்டிருந்தான்......

அவன் !

இன்னும் யோசித்துக் கொண்டே இருக்கிறேன்.

சுமார் முப்பத்தைந்து வயதைத் தாண்டி விட்ட அவனது முகத்தில்...

அனுபவ முதிர்வு ஒரு துளி கூட எட்டிப்பார்க்கவே இல்லை.

வயதொத்தவர்கள் எல்லோரும் மனைவிகளுடனும், குழந்தைகளுடனும் ........

இது, அவனுடைய கவலையை அதிகரித்துவிட்டிருந்தது.

தன்னை ஊர் அறிந்துக் கொள்ளவில்லை என்பதையும், தான் வித்தியாசமானவனாக இருப்பதையும் அவன் விரும்பவில்லை.

அதோடு, அனுமதி தேவைப்படாத அநேகமானவைகளை அனுபவித்து விட்டவனென்றும் 'பெண்' என்ற அனுபவம் கேள்விக் குறியாகவே இருந்தது.

'அதுவும் மதிக்கின்ற தெய்வமே அந்த எனக்கு....' என்ற யோசனையே இப்படி அவனை அடிக்கடி உட்காரவைத்தது.

பாடசாலையிலும் ஒரே வகுப்பில் பொறுமையாக இரண்டு மூன்று வருடங்கள் இருந்திருக்கிறேன்.... இன்னும் படிப்பு அவனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அவனிடம் பொறுமை இருந்த அளவு இயற்கை பொறுப்பில்லாமலிருக்கவில்லை.

எந்தவித முன்னறிவிப்பும் இன்றித் தாடியும் மீசையும் அரும்ப ஆரம்பித்துவிட்டன.

படிப்புக்கு விடையடியாக முழுக்குப்போட்டுவிட்டான்..... அன்று.

அதன் பின்பு....

சினிமா, உணர்ச்சிநூல், பெண் ரசனை.... அவனுடைய நித்தியகருமங்களாகிவிட்டன.

இந்த வேலைப்பளுக்களால் எத்தனை நாட்கள் அவன் வீட்டையே மறக்க நேரிட்டதுண்டு.

அவனைத் திருத்த முயன்று தோல்விகண்ட பெற்றோரே அவன் வழியிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர்.

வேளாவேளைக்குச் சாப்பாடு, படுக்கைக்கு அனுமதி.....

அவனுடைய கவலை என் ஆரம்பமானதே தன்னுடைய எதிர்காலம் பற்றி சிந்திக்கத் தொடங்கிய போதுதான்.

அவளை வாய்விட்டுக் கேட்ட போதுதான் திருமணமாகாமல் தமக்கொரு மகன் இருக்கிறான் என்ற உணர்வுக்குப் பெற்றோர் உட்பட்டனர்.

தரகர்கள் கூடத் தயங்கினார்கள்.

'ஆயிரம் பொய்', பரிட்சயமான அவர்கள் கூட நழுவிவிட்டனர்.

ஆம்!

அவனைப் பற்றித்தான் ஊர் முழுவதும் தெரியுமே!

பாதையில் அவனுடைய பார்வையே படக்கூடாது என்று தெய்வத்தை வேண்டிக் கொண்டு தெருவிற்கு வருகின்ற எந்தப் பெண்தான் இவனுடைய தாலிக்குத் தலை சரிப்பாள்?

ஆண்மைக்கான அத்தனை கம்பீரமும் இருந்தும் தனிமை அவனைத் தத்தெடுத்துக் கொண்டது.

அந்தக்காலங்களில் அவனிடம் பல மாறுதல்கள் வெளியே போகும் நேரங்களைக் குறைத்தான்

தாழ்வுணர்வாந் தனி
மைப்பட்ட அவனுடைய
திடீர் மாற்றத்தை நம்பமா
ணவுக்கு....

வீட்டாரின் விசுவாச
மேகம் விரியத் தொடங்க
வில்லை.

நாவல்களையும் சிறுகதை
களையும் நாடினான்.

தனிமைக்குத் துணைபோக
வென்று வந்த அவைகளிடம்
ஏதோ ஒரு புதுமை புகுந்தி
ருந்ததைக் கண்டான்.

......

அவைகள் காட்டும்
ஒரு பொதுவான முடிவு..'

ஆம் ..

இந்த முடிவின் பின்
அவனுடைய ஆசிரியர்
ஒருவரின் குரல் ஒலித்தது.

வகுப்பறை யன்னலி
னூடாக வானத்தை வாசித்
துக் கொண்டிருந்த இவனை
அந்த ஆசிரியனுக்குமே பிடி
க்கவில்லை.

ஆனால் அந்த ஒரு
ஆசிரியனுக்கு மட்டும் இவனி
டமும் ஏதாவது இருக்காது
போகுமா? என்ற எண்ணம்
இருந்ததோ என்னவோ?

'பிரேம்'....

இப்படி விழித்துக்
கொண்டே வகுப்புகளை
ஆரம்பிப்பார்.

அந்த ஆசிரியரின்
அறிவுரைகள் கூட அவனை
அன்று மாற்றவில்லை.

அவன் அவைகளைக்
கேட்டுவைத்துக் கொண்டது
மில்லை.

இன்று...!

அவனுடைய கருத்துக்
கள் அத்தனையும் .... ஏன்
ஆசிரியர் கார்த்திகேசனே
அவன் முன் நிற்கிறார்.

* * *

அவனுள்ளேயே ஒரு
'பிரேம்' உருவாகிவிட்டான்.

இன்றும் வழமைபோல
பஸ்ஸிப் பொனியில் கைவிட்டுத்

கைவிட்டுத் தூவுகிறேன்.
இது கனவுதான்...
ஆனால் முதன்முதலாக
ஒரு பயனுள்ள கனவு.

சுமார் ஐநூறு யார்
தூரத்திலுள்ள 'பீற்றரி'ன்
சிறான் கதவுகளை அவன்
தள்ளிய போது....

அங்கு காத்திருந்த
மூன்று பேரும் பீற்றரும்
கூட இவனுக்கு முதலிற்
சவரத்தை முடித்து அனுப்
பிடத் தயார்.

வழமையும் இதுதான்.
ஆனால் இன்று அந்த மூவ
ரும் பீற்றரும் மேசையில் விர
ல் வைக்குமளவு இவனது
நடத்தை மாறி இருந்தது.

தோள் தொட்ட
முடி நுனிகள் துண்டிக்கப்
பட்டன.

மல்லிப் பேணியின்
பணம் பீற்றர் கைக்கு மாறி
இருந்தது.

உதறிய திண்டைக்
கையிற் போட்டபடி கடை
வாசலில் வந்து பார்த்துக்
கொண்டிருந்த பீற்றருக்குப்
'பிரேம்' படத் தள்ளிக்
கொண்டு உள்ளே போன
போதுதான் உணர்வு மீண்
டது. சிறிது காலத்துள்ளேயே

உடையிலும், நடை
யிலும் கூட மாற்றமே
கண்டது.

ஊர் சுற்றுவது முற்
றாகவே நிறுத்தப்பட்டது.

வீட்டாரே அவனை
நம்பவில்லை.

ஒருவரை ஒருவர் கிள்
ளிப்பார்த்துத் தாங்கள் காண்
பது நிஜமா என்பதை உறுதி
தும் செய்வதற்கென சிரமப்பட்
டுக் கொண்டே இருக்கின்றனர்.

உண்மையாகவே அவ
ன் நிஜமாகவே மாறியிரு
ந்தான்.

உள்ளூரிலும் அண்டை
ஊர்களிலும் நடைபெறும்
கலை விழாக்கள், கருத்தரங்குகள்

அவனைக் கவர்ந்திருந்தன.

ஆசிரியர் கார்த்திகேசனுக்கு அடிக்கடி அலுப்பாக இருந்தபோதும்....

அவனுடைய திமிர்மாற் றமும்.... அடக்கம்புகுந்த அவன் நடைமுறையிற் கண்ட நெளிவு சுளிவுகளைக் குறைவான வெளி னும் தான் கற்றுக்கொண்ட வற்றுடன் இணைத்துப்பார்க்கின்ற தன்மையும் அவரை மெதுவாகவே கவர்ந்துவிட்டிருந்தது.

ஏதாவது ஒன்றை சந்தேகத்துடன் தினமும் அவரை அவன் அணுகினான்.

அவர் மட்டும் அவனை முதலில் நம்பினார்.

"திருந்திவிட்டான்" இப்படிக் கூறுவதற்கும் ஒரு சாரார்.

"அதோ பிளான்போட்டுத்தான் செய்கிறான் என்றனர் இன்னும் சிலர்.

"ஆளைக்குத் தட்டுப்பட்டது" என்று கூறியவர்கள் கூட உண்டு.

இப்படிப் பரபரப்பாக ஆராய்ந்த ஊர்.... மெல்ல மெல்ல அவனை ஏற்றுக்கொண்டது.

தனியாக நிற்கும் தான், தனக்கு மட்டும் பூரணமாக முடியுமா?

தனிமரம் தோப்பாக முடியாதே..!

ஒரு ஸ்தாபனம்

..........

இது நீண்டகாலக் கனவாகவே அவனை உறுத்தியது போல உணரத் தொடங்கினான்....

படித்தவர்கள் என்றும் பண்புள்ளவர்கள் என்றும் கூட்டுவதோடு மட்டும் திருப்திப் பட்டுக்கொண்டவர்களாக அவ்வூரிலிருந்த இளைஞர்களை மெல்ல மெல்ல அணுகினான்.

எந்தப்பிரச்சினையை எடுத்தாலும் அதற்குள்ளாய்

ஏதோ ஒரு விதமான அடி
ப்படையை வைத்துக்கொண்
டேதான் அவன் பதில்
கூறுவான்....

ஆனால்...

அந்த இளைஞர்கள்
எல்லோரும் ஓர் அதிசய
நால்லியத்தைப் பார்ப்பது
போல அவனை விழிவெட்
டாமற் பார்த்திருப்பர்.

காலப் போக்கில் ஒரு
சங்கம் அமைத்துக்கொள்ள
அவர்களைத்தான் பேரும்
ஒன்றித்து உதவுகின்ற
அளவுக்கு உருவாக்கி
யிருந்தான்.

மண்ணின் மைந்தர்களை
உருண்டு, விண்ணையும்
வாசித்து விளங்கிக்கொண்
டவனுந்தானோ என்னவோ
அவனுடைய எல்லாவற்றிலுமே
அனுபவமுதிர்ச்சியும் ஆழமான
பார்வையும், ஆக்கத்திறமை
யும் கூடவே இருந்தன.

வெறும் கோஷங்க
ளோடு சங்கம் நின்றுவிடவில்லை.

இளைஞர்கள், கோவில்கள்
சுத்தம் செய்தல், ஏழ்மை நிலை
போக்கும் சிறுகைத்தொழில் ஊக்
குவிப்பு உட்பட அரசியல்
விடயங்களோடும் அந்த சங்க
அங்கத்தவர் நெருக்கமாகத்
தம்மை இணைத்துக் கொண்டனர்.

தன்னுடைய பிள்ளை
ஒன்றுக்கு நோய் அல்லது விப
த்து ஏற்பட்டு அந்தப் பிள்ளை
யை வைத்தியசாலை கொண்டு
செல்லும் பொறுப்பை இந்த
சங்க அங்கத்தவரில் ஒருவர்
பொறுப்பேற்று விட்டார்
தாமே தாமதித்துப் போகலாம்
என்ற அளவு அவர்கள் மேலான
நம்பிக்கை ஊரவர்க்கு வளர்
ந்துவிட்டது.

இவர்களும் ஊரவர்க
ளின் அபிலாசைகளுக்கும்
உணர்வுகளுக்கும் மிகுந்த
மதிப்பு அளித்தனர்.

சேற்றில் புதைந்திருக்கும்
'வண்டி'ச் சில்லைத் தோள்கொடுத்

நீதி தூக்கிவிட்ட பின்புதான். அதைத் தாண்டிப் பொறுமையை மக்களோடு இணைந்து நின்ற ஒரு தோழமை அமைப்பு கண்டோம். மக்கள் ஏற்றனர்.

இன்று ஒர் பொங்கல் நாள்.....

மட்டுமல்ல சங்கத்தை அமைத்து கொண்டு நிறைவு பெறுகின்றது.

இரண்டுக்குமாக விழா எடுக்கும் அவர்கள் கூட்டமும் ஆட்டமுமாக நின்றனர்.

இவ்விழா வென்று பிறந்த தயாரிப்புடன் ஆரம்பமானது.

பயனுள்ள பல நிகழ்ச்சிகள். உலகே திரண்டு விழாக் கண்டு கொண்டிருந்தது.

ஒலிவாங்கியுடன் மேடைக்கு வந்த அறிவிப்பாளர்.

"எமதும் உங்களதும் அன்புக்குரிய... 'பிரேம்' அவர்கள் தலைமையுரை நிகழ்த்துவார்" என ஒலிபெருக்கி கூறுவதற்கும் 'பிரேம்' மேடைக்கு வரவும் சரியாக இருந்தது.

"அடி! சுதா! ஏய் 'அவர்' பேசுறடி...

"எங்கட 'பிரேம்' அண்ணர் பேசுகிறார்:"

என்றது சாந்தியின் உதடுகள்.

இது சுதாவும் சாந்தியும் சுமார் ஒராண்டுக்கு முன்னர் அவையில் முன்வராதவர்கள்...!

......

இந்த நிகழ்வும் அந்த சங்கத்தவரிடம் ஆயுதம் எடுப்பதும் யாருக்கெதிராகத் திருப்புவது என்பதிலும் தெளிவாகவே கருத்துக்கள் உலவின.

"நடைமுறைகள் மக்களைச் சார்ந்திருந்தால் மட்டுமே மக்கள் எம்மைச் சார்ந்திருக்க முடியும்."

— மா-ஓ-சேதுங் —

# கேள்வி? பதில்!

- கீரன் -

? கீரனே! மதுபோதையில் சிலரிடம் ஞானம் பிறக்கிறதே அது எப்படி?

திரு. சிவநேசன்

டோர்மாகன், ஜேர்மனி.

● நண்பரே! மதுப்புட்டிக்குள் ஞானம் அடைத்து வைக்கப்படுவதில்லை. அவரவரிடம் உள்ளவையே மது போதையில் வெளிப்பட்டுக் கொண்டு வருகின்றன. எனவே குறை மனப்பாங்குள்ளோர் கூடியிருந்து குடிப்பதைத் தவிர்க்கலாம்.

மதுவை அளவோடு பாவிப்பது ஒன்றும் பாவமோ, குற்றமோ, ஒழுக்கவீனமோ அல்ல. அதுவேளை அதுதான் அவசியம் என்றுமில்லை. அதனின் அருந்தாதவர்களையும் எனக்குப் பிடிக்கும்.

அருந்தாமல் விடுவது அதிக அந்தஸ்து என எண்ணிப் பிதற்றுபவர்கள், மறைந்து குடிகாரர் என்போர் பாவம் பரிதாபத்துக்குரியவர்களே!

? கீரனே! தமிழீழத்தின் நிகழ்வுகளுக்குள் மதுங்கி, விழி பிதுங்க வாழும் தமிழ்மக்களுக்கும், இலங்கைச் செய்திகளைக் கேட்டு தினமும் கவலையுடன் வாழும் தமிழ் அகதிகளுக்கும் ஆறுதலாக ஏதாவது கூறுவீர்களா?

திரு. சிறீதரன், சீகன், ஜேர்மனி.

● "அகமும், புறமும் தமிழர் காவியங்களல்லவா?" ஒரு முறை சொல்லிப்பார்க்கலாம்.

? நீரன் அவர்களே...!
உடைக்கு அடங்கா தானம் கடல் கடந்த பிறகுதான் வந்ததா? அல்லது தாய்நாட்டிலே கூடு கட்டி, சந்தர்ப்பம் பார்த்து, வாய்வேட்டைக்கு இங்கு புறப்பட்டு வந்துவிட்டதோ?

திரு. குழந்தைவேலு.
பேர்ண், சுவிற்சலாந்து.

● நண்பரே! எச்சில் துப்புவதால் மடையான் மழுங்கிப் போவதில்லை.

? நீரனே! உறக்கத்திற் கார் ஓட்டும் சாரதிகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

திருமதி. பாமினி, கமல்.
நொயிஸ், ஜேர்மனி.

● இதுவரை தமிழீழவிடுதலைப் பேரில் நின்ற தன்மைகளைவிட உயர்வானவர்கள்.

? நீரனே! யாரிடம் இரகசியம் சொல்லக்கூடாது?

திரு. மாயா...
நொயிஸ், ஜேர்மனி.

● அறிந்து கொள்ளவேண்டாதவர்களிடம் சொல்லக் கூடாது.

? நீரனே! தமிழன் வெளிநாடுகளிலும் தம்முள் தரம்பிரிக்கிறனே, இது பற்றி....?

திரு. வ. சிவராசா,
டுஸ்பேக், ஜேர்மனி.

● இதுவரையும் மனிதன் மனிதனை வாழ்வதற்கென்ற சூழலை வெளிநாடுகளிலும் அவன் சந்திக்கவில்லை. சமுதாய மாற்றம் என்பது விமானச் சீட்டுடன் கொடுக்கப்படுவதா என்ன? பாதகமான எண்ணங்களைக் கண்டபோது பாரதி சொன்னவைகளைத் தற்காலிகமாக நடைமுறைப்படுத்துங்க

சிறுகதை:

பெஞ்சமினின்

# கடிதம் கதையாகிறது

அதிகாலை சுமார் பதினொன்று ஐம்பது....

அவர்களுடைய அகராதியில் அதிகாலை அதுவே தான்.

இந்த இரண்டரை ஆண்டுகளாக அவனுடைய மட்டுமல்ல அந்தக் கட்டிடத்திலுள்ள இலங்கையர், ஏன் நாடு பூராவும் உள்ள இலங்கையரின் 'ஏர்லி மோர்னிங்' அதுவேதான்.

வழமை போலவே அவனும் அந்த அதிகாலையில் எழுந்துவிட்டான்.

தேனீர் போட்ட அடுப்பை நிறுத்தாமலே அதில் உலை வைத்துவிட்டான்.

ஒரு வாய் உறிஞ்சித் தன் உடலைக் கிளாஸிலிருந்து துண்டித்துக்கொண்டு பொதுக் கிச்சினிலிருந்து புறப்பட்டு வந்தான்.

'அல்டி' அரிசிப் பெட்டியும், கோழித்தோலும், பழைய சோறும், தகரப்புட்டிகளும் ஒரு புறம் ஒதுங்கி அமைதியாக இருக்க 'கோலாப்' போத்தல்களும் 'விஸ்கிப்' போத்தல்களும் தலைநிமிர்ந்து நிற்கும் அந்தக் குப்பைவாளியிலிருந்து வரும் குமட்

டல் நேற்றும் அவனுடைய
அதிகாலை ரம்மியத்தை அறவே
கெடுத்துவிட்டது.

நேற்று பெய்மைவாளி
எடுக்கவேண்டிய முறை
'பாலா'வுடையது.

அவனுக்கான நாள்
வரும்போதெல்லாம் அது
மனம் தட்டுவதும்.....

அதைத் தாங்கமுடியா
மல் மற்றவர்கள் 'கவுஸ்
மாஸ்டரிடம்' முறையிடு
வதும், இது வழமையாகிவி
ட்டது.

'பாலா'வைத் தன் மன
தில் நொந்தபடி மாடிப்படி
களில் இறங்கிய அவனுடைய
கால்கள் 'கவுஸ் மாஸ்டரின்'
கண்ணாடிக் கதவில் நின்றுவிட்
டன.

'குட்டின் மோர்கள்'
பதிலுக்கு 'கவுஸ் மாஸ்டரும்'
சொல்லிக் கொண்டான்.

இந்த இரண்டரை ஆண்
டுகளில் கூடியகாலம் அங்கு
'கவுஸ் மாஸ்டராக' இருந்தவன்
'வில்லியம்' மட்டும் தான்.

வெள்ளைத் தோலுள்ளவ
ர்களிடம் கள்ளம் கிடை
யாது என நினைப்பவர்களை
இவன் முன் கொண்டு வந்து
விடவேண்டும் போல 'ரஜீ
ந்த'னுக்குத் தோன்றுவதுண்டு.

சுமார் பத்துப் பன்னி
ரண்டு ஆண்டுகளாகப் 'பெயி
ன்ற்' காணாதது அந்தக்கட்டி
டம்.

குளிருக்குக் 'கரி' போட்
டு எரித்தபடிதான் கண்விழித்
திருக்கவேண்டும்.

இப்படி ஒரு கட்டிட
த்தில் இந்த இரண்டு பயன்
நிறைந்த ஆண்டுகளைப் போர்
வைக்குள் சுருட்டி முடக்கி
விட்ட இருபத்து நான்கு
பேரில் ரஜீந்தனும் ஒருவன்.

இந்த இருபத்து நான்
கிடன் ஒன்றாக வில்லியமும்
இருக்கிறான் என்றால் அவனுக்கு
இந்தக் 'கவுஸ் மாஸ்டர்' மதி

பிடித்துக் கொண்டதா?
இல்லை இலங்கையரைப் பிடி
த்துக் கொண்டதா?

மாதா மாதம் இருபத்
தெட்டு எப்போ வரும்
என எதிர்பார்த்து வங்கியின்
வாசலில் வந்து....

'ஓட்டோமற்றிக்'
வங்கிப் பொறியில் வாடிக்கையா
ளர் அட்டையைப் போட்டு
விட்டால், இருக்கிறதா...
இல்லையா எனத் தெரிந்துவி
டும்.... சோசல் பணம்!

இந்தப் பொறிக்கு
க்கும் கூட இவர்கள் அக
திகள் என்பது எப்படித்
தெரிந்துவிடுகின்றது.

ஜேர்மனியர் கார்ட்
போட்டால் மட்டும் காசு
கொடுக்கும் பொறி, ஏன்
எம்மவருக்கு மட்டும்
கொடுக்க மறுக்கிறது.

யாரோ எம்மவர்க
ளில் ஒருவர் இந்த சலு
கையைத் தவறாகப் பயன்
படுத்தியதால் எல்லோருக்கும்
நிறுத்தப்பட்டதாகவும் 'ரஜீந்
தன்' அறிந்திருந்தான்.

இருபத்தொன்பது தொ
டக்கம் ஐந்தாம் திகதி வ
ரையான அந்த நாட்கள்
'வில்லியம்' அலுவலகத்தின்
வெளியே நிற்பான்.

இன்று திகதி இரண்டு.
'ரஜீந்தனின்' பங்கு நேற்றே
கொடுபட்டுவிட்டது

வேலைக்குப் போபவர்க
ளைச் சமூகவியற் பகுதிக்கோ
பொலிஸாருக்கோ காட்டிக்
கொடுப்பதோ, ரீ.வி; டெக்
வாங்கி வைத்திருப்பவர்களை
எப்போதாவது சமூக உதவி
அதிகாரிகள் விசாரணை செய்யும்
போதெல்லாம். அவை தன்
னுடையவை என்று சொல்லி
இவர்களைக் காப்பாற்றிவிடு
வதோ வில்லியத்தின் கைவந்த
கலைகள்.....!

எனவே தேவைக்கேற்ப
இவர்கள் ஒவ்வொருவரும்

கொடுக்கும் தொகையை மாதாமாதம் லஞ்சமாக அல்ல சன்மானமாக எண்ணிக் கொள்ளும் இவனும் ஒரு ஜேர்மன் பிரஜை.

* * *

ரஜிந்தனைக் கண்டதும் சிரித்த முகத்தோடு ஒரு கட்டுக் கடிதங்களைத் தூக்கிக் கொடுத்தான்.

ஒன்றிரண்டு வெள்ளை 'கவர்'கள் தவிர எல்லாமே நீலக்கவர்கள்.

படிகளில் ஏறியபடியே 'கவர்'களின் முகவரி, எப்போ தபாலில் சேர்க்கப்பட்டது என்பதெல்லாம் பார்த்துக் கொண்டான்.... ரஜிந்தன்.

ஒரு மாதம்; ஒரு வாரம் இப்படிச் சக்திக்கேற்பப் பயணம் பண்ணி ஒரே நாளில் வந்த, அந்த மடல்களை ஆசைதீரப் பார்த்துவிட்டான்.

.........

"அயல்வீட்டில் ஒருவர் சுடப்பட்டார். அப்பாவுக்கு சுகமில்லை, அக்காவும் குழந்தைகளும் பட்டினி.... தங்கைக்கு இரண்டு மூன்று இடத்தால் கேட்டு வந்தது சீதனம் தான் அப்பிடி இப்பிடிக் கேட்கிறார்கள். தம்பி! நீ மூன்று மாதத்துக்கு முந்தி அனுப்பியதுக்கு இன்னும் ஏதும் அனுப்பயில்லை"

.....

இப்படியான வாசகங்களை கடிதத்தில் ஒன்றிரண்டு மாற்றங்களோடு உயிர்த்து உயிர்த்து வந்து கொண்டிருக்கும்......

அதற்காக....!

வீட்டுக்கடிதம் வேண்டாம் என்று என்றுவது மனம் மறுத்துவிடுகிறதா?

.....

ஆம்!

வீட்டிலிருந்து கடிதம் வரும் என்ற நினைப்பார்

ப்புடன் இந்த இரண்டொரு நாட்கள் சற்று முன்னதாகவே எழுந்து விட்டது வீண் என்றாகி விட்டது.

"சனியனுங்கள் எல்லாம் செத்துத் துலைஞ்சிட்டுதுகள் போல....."

இப்படி உள்ளூரத் திட்டிக்கொண்டு....

அறைக் கதவுகளைத் தட்டி ஒவ்வொன்றாகக் கொடுத்துக் கொண்டு வந்தான்.

"என்ன ரஜீக்கும் கடிதம் வந்திருக்கும் போல" என்ற 'ரவி' யின் கேள்வியை சமாளித்து.....

"ஓமோம்..."

என்று கூறிக் கொண்டே தனது அறைக்குள் புகுந்து கொண்டான்.

இ. ராஜதேவன்
கேர்லின் ஸ்ராச - 29,
டுசல்டோர்வ்;
மேற்கு ஜேர்மனி.

அந்த முகவரியில் ஒருவர் ஒரு வாரம் மட்டுமே தங்கியவர்......

எங்கேயோ வேறு நகரத்திலிருந்து இங்கு வந்து பதிவு செய்து கொண்ட அவரை ஒரு நாள் மட்டும்தான் 'ரஜீவன்' பார்த்திருக்கிறான் ஆயினும் அது அவருக்குரிய கடிதம் தான் என்பதைப் புரிந்து கொண்டான்.

அங்கு வந்த மறுவாரமே 'கனடா' சென்றுவிட்ட அவனுடைய முகவரிக்கு எப்படி அதைச் சேர்ப்பிப்பது என்பதில் சிரமம் இருப்பதாகவே தோன்றியது.....

அப்படி என்ன பெரிதாக இருந்துவிடப் போகிறது எனக்கு வரும் கடிதங்கள் போலவே இருக்கும்...

'பெட்டிள் வீசிவிட்டு ஒரு பெட்டி பச்சை அரிசியைக் கையிலெடுத்துக் கொண்டு கொதிக்கும் உலையைத்

தணிப்பதற்காகக் குசினியை
நோக்கிச் செல்கிறேன்.

எங்கேயும் பயணப்பட
முடியாமல் முத்தப் புள்ளியிட்
டுக் கொண்ட அந்த மடலை
என்ன செய்வது...?

என்னவென்றுதான்
பார்ப்போமே!

கடிதம் உடைக்கப்
பட்டது.

"அன்பே"

என விழித்திருந்த
அந்த மடல் நிறைந்த சோ
கம்...

அதைப் பிரித்தமைக்
கென மானசீகமாக மன்னிப்
புக்கோரியது.

அவனுடைய மனச்சா
ட்சி அவனைச் சவுக்காலடித்
தது.......

சோற்றை ஒரு துளாவு
துளாவிவிட்டு தொடர மன
மில்லாமல் மடித்துவைத்த அந்த
மடலுக்குரியவள் யார் என்
பதை மட்டும் பார்த்துவிடுகி



றேன்.... ஆம்! அதே பெயர்.

கடிதத்தை உடைத்
தமைக்காக மன்னிப்பு...!

அது ஒரு மடலாகி
விட்டது. மன்னிப்பு மடலா
யிரும், தீராத அந்தக்கடித
தவரிகளிடம் கேள்வை இரு
ந்தது;

உடைத்துவிட்ட
கடிதம் ஒட்டப்படவில்லை,

"அவசரம் ஏதாவது
இருக்குமோ என உடைத்தேன்,
அதைத் தொடர்ந்து பார்க்க
முடியவில்லை. அன்பின்
முகவரியையும் என்னால் தேடிப்
பெறமுடியவில்லை.

மன்னிக்கவும் தப்பாக
எதுவும் எடுக்கமாட்டீர்க
ளாயின் உங்கள் கடிதத்தில்
உதக்கப்படாத எனவும்
சிந்திக்கிறேன்...."

என்ற வாசகங்களோடு
புகுந்து கொண்டது இந்த மட
லுக்குப் பதில் கிடைத்தது.

........

ஆம்...
இப்பொழுதெல்லாம்
அவன்.....
அவன் மட்டுமேதான்
கடிதமெடுக்கப் போவான்
என்று ஒரு காலம்
அது இன்று வரை கூடப்
பழக்கப்பட்டுவிட்டது.
இந்தக் கடிதங்களை
ஒவ்வொன்றும் ஆசையோடு
வரும்.... அவை காதலாகப்
பரிணமம் பெற்றபோதுள்ள
வளர்ச்சிகளையும் அவதானி.
த்துக் கொள்கிறேன்.
இதுவே அவனுடைய
தேவையாகிவிட்டது.

* * *

தன்னுடைய பழைய
காதல் விவகாரங்களையெல்லாம்
அவனுக்கு எழுதிட வேண்டும்
என அவன் யோசித்ததுண்டு.
அன்று அவனை மறு
க்க முடியவில்லை....
அவனைக், கேட்ட
தைக் கொடுக்கமுடியாத
போதாவது அப்பா கொஞ்
சம் விட்டுக்கொடுத்து நடந்
திருக்கலாம்!
இப்படியெல்லாம் யோ
சித்து அந்த உடைந்த
மனதோடு மண்ணைப் பிரிந்து
வெளியே வந்தவன்!
ஜேர்மனியில் ஒரு தமி
ழ் அகதி.
சீதனம் என்ற சாபக்
கேடு அவளைப் பிரித்தமைக்காக
சமூகத்தின் மீதே வெறுப்புக்
கொண்டவன்.
ஆனால்...
காலப் போக்கில் அது
பெரிதாக அவனால் உணர
முடியவில்லை.
அதே காதலியின்
பெயரிலேயே நீயும் இருக்
கிறாய் என்று அவளிடம்
எப்படிச் சொல்லிவிட முடி
யும்.
இவைகளுக்கிடையே
தவித்தபோதும்....

ஏதாவதொரு நிலைகிடைத்து விட வேண்டும் என அச்சுறுத்தியது.

ஆனாலும், ஆழமிகுந்திருக்கும் சில காரணங்களும் கூட இந்த நினைவினை ஏமாற்றிக் கொண்டிருந்தன.

சவுதி அரேபியாவில் இரண்டாண்டுகளைக் கழித்து விட்டு வந்திருந்த போது....

ஏதாவதொரு முடிவை அறிந்துவிடுவதற்காக 'ரதி'

ஆம்...

அவனுடைய பழைய காதலி...!

அவன் முன்னிருந்த போது....!

அன்று....!

முடிவின் முழுமைக்கும் தந்தையையே பொறுப்பாக வைத்து விட்டுத் தன்னைவிடுவித்துக் கொண்டான்.

அவனுடைய அழகோ பணமோ, ஜாதியோ, சமூக அந்தஸ்த்தோ எதுவுமே பெரிதாக இல்லை என்பதாலும்



ரஜீந்தனின் அக்கறை பழைய 'ரதி'யிடம் அவ்வளவாகப் பதிந்து விடவில்லை.

......

அன்பு, பாசம் என்பதெல்லாம் போலி அவை கற்பனை வாழ்வின் காவலர்கள். நிஜத்தை நெருங்க விடாமல் காக்கும் காப்பவர்கள்.....

இப்படியே தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டு 'ரதி'யை மெள்ள மறந்து விட்டான்.

.......

'கந்தசாமி' என்ற பெயரினை 'ரஜீந்தன்' என மாற்றிக் கொண்டு இந்த இடத்தில் இருக்கும் இன்றுவரை 'கந்தசாமி' என்ற பெயரையே எப்படி நினைத்துப் பார்க்கவில்லையோ அதுபோல 'ரதி'யை அவன் நினைத்துப் பார்த்ததே கிடையாது......

இன்றைய காதலியின்
பெயரும் அதுவானபோது
.........
சிலவேளை அவனிடம்
அந்த நினைவுகள்.
......
புதிய 'ரதி'யின்
புகைப்படமும் கூட
சற்று அவளுடைய சாய
லாகவே இருக்கின்றது.
யாழ்ப்பாணத்தின்
சூழ்நிலையில் இருக்கமுடியா
மல் முல்லைத்தீவுக்கு வந்து
ஒன்றரை வருடங்களாகி
றது என்ற தகவல், குடும்
ப அங்கத்தினர் என்பன
எல்லாம் அறிந்திருந்தான்
எதுவுமே பழைய ரதியை
விட பெரிதாக ஒன்றும்
இல்லை.....
என்றபோதும்...'
இவள் அவளை விட
அவசியமாகவே தெரிந்தது.
அன்றைவிட இன்று
அவசியமாகவேயுள்ளது.

ஏதாவது வேலைக்குப்
போய் மாதம் நாலோ சேமி
க்க வேண்டும்...'
குடும்பகாரருக்குக்
கிடைக்கும் சலுகைகள்...!
எல்லாவிதமான விட
யங்களையும் பிள்ளையள் தெரிந்
திகிட்டு வாழ்ந்து வெப்புவேலை
எடுத்த முடிவின் படி...!
........
ஐயாயிரம் டொச்
மார்க்குகள் அவசரமாகப்
பறந்தன.
'ஏஜென்சி'யால் இந்தி
யாவில் இரண்டுமாதம் தடை
ப்பட்டு நின்றபோது மட்டும்,
எண்ணாயிரம் 'யூனிட்' ரெலி
போன் கரைத்தது.
இன்று மாலை 6.20
க்கு 'கெல்டோரப்' விமான
நிலையத்தில் 'ரதி' வந்திறங்
கிய போது.......
"........மை கோர்ட்...!"
கந்தா நீங்க எப்
படி..... இ..ங்..க...?

# இதுவும் ஒரு வியட்நாம்

இயற்கை
இலங்கையோடு
உறவு வைத்தது உண்மைதான்....
ஆனாலும்
நாங்கள் தெருக்களையும்
தேசங்களையும்
திருத்தித் தேரோட்டினோம்...
வெளியும் வியர்வையும்
எங்கள் தேசங்கள்தான்...
அதனைத்தான்
வாழ்க்கை
எங்கள் வயிறுகளோடு
பசிப்புரட்சி செய்யவில்லை.....
ஒவ்வொரு விடியலும்
எனக்கில்லை என்பதுவாய்
எங்களுக்காய்
என்றுதான் விடிந்தது.....
ஆனாலும்
காலங்கள் கரைந்ததில்
எமது உரிமைகள்
சிறை சென்றன.....
நியாயம் கேட்ட
எங்களிற் பலர்
இன்றுவரை காணாமற் போனார்கள்.

அதோ..
அவர்களின்
போர் வாகனங்கள்
எமது பிணங்களின் மீது
போர்வை செய்கின்றன....
புரட்சியின்
கை கோர்ப்புக்களில்
நிச்சயமாய் ஒருநாள்
அந்த மண்ணின்
சிவப்பில்
ஒரு சுதந்திர விடியல்
உண்மைதான்...
அதுவரை
இதுவும் ஒரு
வியட்நாம்தான்!

- கார்த்திகன் கோவிந்தகுமார் -

வெண்பா ஒரு பார்வை

- மூக்கையம் திருவாதிரையன்.

# ஔவையாரும் அப்படி? இப்படியா?

கோவை அன்பர் தந்த "வள்ளுவன் மீது சந்தேகம்" என்ற கட்டுரையின் மீதான தாக்க அலைகள் இன்னும் ஓயவில்லை என்பதை 'அறுவை' ஆசிரியருக்குப்பின் 4-வது, ஐந்தாவது இதழ்களிலெல்லாம் தெரிகின்றது.

இந்நிலையில் இக்கட்டுரை பிரசுரமாகுமோ என்பது கேள்விக்குறி!

இருந்தபோதும் அறிந்ததைச் சொல்லாமல் இருப்பது கூட ஒருவகைத் துரோகமாகும் என்பதால் இதைச் சொல்லப்புகுகின்றேன்.

"இப்படியான கட்டுரைகள் மூலம் பரபரப்பை ஏற்படுத்துகிறீர்" என்ற குற்றச்சாட்டு 'அறுவை' ஆசிரியர் மீது வைக்கப்படலாம்.

அப்படியொரு நோக்கத்தை நான் காணவில்லை.....

இலக்கிய - கலைக் கடலிலே ஆழமாக எண்ணி நாம் உட்கார்ந்து பயணிக்கும் இதிகாசங்கள், இலக்கியங்களில் இருக்கும் ஓட்டைகளைச் சுட்டிக்காட்டுவதும், அவைகளை உற்றுநோக்கும் இயல்பை உங்களுக்கு ஊட்டுவதுமே எனது நோக்கம். இந்த ஆசிரியரும் இதைப் போலவே என நம்புகிறேன்.

.......

வாசக அன்பர்களே!

"வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், - மாமலராள்,
நோக்குண்டாம், மேனிநுடங்காது, பூக்கொண்டு,
துப்பார், திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு."

— ஔவையார் -

மேற்படி பாடல்வரிகளில் தும்பிக்கையான் பாதம் தொழுதால் மாமலராள் நோக்கு... அதாவது சரஸ்வதி கடாட்சம் கிடைக்கும் என்கிறார். ஏன் நேரடியே சரஸ்வதியை வழிபடும் வழிகள் அன்று அடைக்கப்பட்டிருந்தனவா? என்ற ஒரு சந்தேகம் எழுந்தது.

இதனால் அப்பாடலைப் புரட்டிப் பார்க்கவேண்டிய நிலை உருவாகிப் போனது.

வாக்குவன்மையாம், மகிழ்வுடைமாம், உளமகிழ்ந்த உடல் இவைகளோடு மாமலராள் நோக்கும் உண்டாம். என்பவைகளிலிருந்து .....

வாசகர்களே! வெளிப்படை வரி தெரியாது தவிழ்த்துக்கொண்டிருக்கும் ஒரு உட்கருத்தை உங்களால் உணரமுடியும்! இல்லாது விடுதலும் இங்கு சொல்லப் பட்ட பொருள் பொருத்தப்பாடற்று இருப்பதையும் தெரிந்தே ஆகும்.

இந்தப்பாடலைக் கூர்ந்துநோக்கி உள்ளிருந்த உள்ள உண்மையை வெளிகொணர்ந்த போது மேனி - குப்பைமேனிப்பூண்டு, தும்பி - முடிதும்பை, கையான் - கையாந்தகரை, பாதம் - சிறுசெருப்படி -------

இந்த நான்கு மூலிகைகளேயும்.

முறைப்படி உட்கொள்ப
வர்களுக்கு .... வாக்குவன்
மை, மனோதிடம், அறிவியல்
விருத்தி, சுகதேகம் என்பன
உருவாக முடியும் என்பதே!

அன்பர்களே தமிழ்
மொழிக்கே கொடையாகக்
கிடைத்த ஔவையாரின்
தூய தமிழ்ப்பாடலொன்
றின் நாசனை ஆக்குவ
தெமது நோக்கமல்ல....

ஒப்பீட்டு வகையில்
சில உண்மைகள் வெளி
க்கொணரப்படும் போது
அவை விமர்சிக்கப்பட
முடியாததை என்று வரைய
றுக்கப்பட்டதாக எதை
யும் நாம் கூறிக்கொள்ள
முடியவில்லை.

எனவே ஔவையா
ருடைய இப்பாடலையும் ஒப்
பிட்டு நோக்கும் வகையில்
ஒரு மருத்துவத் துறைப்பாட
லொன்றும் தமிழிற் காண்கி
றோம்.

சித்தவைத்தியம் தோன்
றிய காலங்களில் "அகத்தியர்"
"தேரர்" போன்றவர்களை-
அவர்களின் பின் 'யூகிமுனி'
என்பவரும் வாழ்ந்தனர்

......."யூகிமுனி 3000" என்ற நூலில்....

"துப்பாவும் பலம் நாலிற் றுடியான பூமேனித் திப்பிலியான்
அப்பாவும் பாதிமுதல் அடைவாக இதையுலர்த்தி ஆண்மை கொள்ள
மெய்ப்பாக வாக்குவரும் மேன்மைவரும், வாயுவெலாம் மெலிந்து
- போகும்.
உப்பானதுவிருந்தால் வைத்தியமும் உறுதியாம் - உண்மையாமே!"

இப்படி பொருள் செய்
யுள் காணப்படுகின்றது.

மேற்படி வைத்தியப்
பாடலின் கருத்து ....

இப்பைமேனி, முடதும்
றை, கையாந்தகரை, திருபெரு
ப்படி ஆகிய மூலிகைகள் நாலு
பலம் நிறுத்தும் உலர்த்தி,

முறைப்படி பாகம் செய்து உட்கொண்டால், வாக்கு வரும், மேன்மை வரும், வாய்வு போகும் எனவும். இத்துடன் இந்துப்பு உப்பு சேரும் போது இது இன்னும் சிறப்பான பலன் தரும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

வாஜீகர சிகிச்சைப் பிரிவில் இப்பாடல் முழுமையும் மருத்துவப்பாடலாக அமைகின்றது.

இப்பாடலுக்கும் ஔவையாரின் பாடலுக்கும், அமைப்பிற் சிறு மாற்றமே தவிர கருத்தில் எந்த மாற்றமும் இல்லாததாகத் தெரியவில்லை.

அதுவேளை 'யூகிமுனி'யின் பாடல்கள் இருநூறு முன்னர் எழுதப்பட்டன என அறியும் போது ஔவையாரின் ஆக்கத்தின் மீது ஒருவிதமான சந்தேகங்கள் கூடவும் எழுகின்றதல்லவா?

எதுஎப்படி இருப்பினும் பாடல்கள் பயனுள்ளவை, இருந்தபோதும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஒரு காலகட்டத்தில் ஏதோ இலக்கிய மோசடி ஏற்பட்டிருக்குமோ?

# அஞ்சற்கல்வி

பரீட்சார்த்த வகுப்புக்களை நடாத்திப்பார்த்தோம். ஆசிரிய சேவை தவிர்ந்த ஏனைய செலவினங்கள் கூட சராசரி ஒரு மாணவருக்கு 40/- DM களைத் தாண்டிவிட்டது.

பரவலாக இதைச் செய்வதாயின் எமது தலைமைச் செயலகங்கள் ஏற்றுக்கொண்டபின்னரேதான் செலவினங்களை வழங்குவதாக சில சர்வதேச பொதுநல ஸ்தாபனங்கள் கூறியுள்ளதுடன் முடிவுக்காகத் தாமதிக்கவேண்டியதாகவும் விட்டது. இதைத் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளோம்... மன்னிக்கவும்.

# பொழியாது 5

## கலந்தவை

மயூரன்-

"ப்ளீஸ் உங்களிட
மிருந்து பிரிந்துபோகின்ற
கொடுமையை மட்டும் என
க்குத் தந்துவிடவேண்டாம்"
என்று மன்றாடிய போது....
"தேவி.... வாழ்க்கை
உன்னோடுதான் என்பது
தீர்மானிக்கப்பட்டுவிட்டது.
இந்த முடிவில் மாற்றம் இரு
ப்பதாயின் அது என் முடிவு
க்குப்பின்தான்"
என்று கூறிய வார்
த்தைகள்.....
கடிதத் தொடர்புகள்
ஆரம்பித்து....
நின்றுவிடுவதற்கான
கால இடையில் ஒரு நாள்
ஆம்....!

'மோகனைத் தேடிப்
'பரமேஸ்வரா கல்லூரி' வளாக
முன்றலில்.....
அவனுடைய இதயம்
போல அகன்று உயர்ந்து
நெருக்கமான கிளைகளும்
இலைகளும் பரப்பிப் பச்சைப்
பசேலென நிற்கும் அந்த
'மலை வேப்பம்' மரத்தின் கீழ்
சீமெந்து இருக்கையில்....
அமைதியும், ரம்மிய
மும் ஒன்றி.....
அமைந்து கொண்டிரு
க்கும் இளவட்டங்களையே
பார்த்துப் பார்த்து...
இமை மூடத் தாமதி
க்கும் அந்த இனியமாலை
--------

தொட்டுவிட்ட போது
நடுங்கிய அவர் விரல்கள்
கெட்டியாகி....!
அவன் தோள்களை
இறுகப்பற்றிய அந்த இனி
ய பொழுது....!
அந்த அவனுடைய
வருகை அவளுடைய எதிர்
பார்ப்பே இல்லை என்பதால்
விசேட உடும்போ....
வேறெதும் வாசனைகளோ
அவனிடம் காணவில்லை...!

......

அவனுடைய மார்
பின் மீது புதைத்த முகத்
தை அடிக்கடி அவன்
கைகள் வருடியதும்....
மேல் நோக்கி உயர்த்த
முனைந்ததும்....
வேண்டாதவளாக
இருந்ததை மறந்தவள்....!
அவனுடைய மார்
பின் வியர்வை நெடியை
விரும்பி நுகர்ந்தாள்...
வாசனைத் திரவியக்
கடை ஒன்றை 'லொறி'
மோதி உடைத்துவிட்ட
போது உட்புகுந்த உணர்
வின் அவளுடைய மூக்குநுனி
கிமக்கட்டுவரை உயர்ந்து
செல்கின்றது.
மோகனின் பிடரியில்
ஒரு சதுர அங்குலம் எத்தனை
மயிர்க்கண்களைக் கொண்டிரு
க்கும் என்பது அவளுடைய
விரல் நுனிகளுக்கே வெளி
ச்சம்....!
பார்வையின் செங்கு
த்திற் படுகின்ற அந்தப் பா
வையின் முதுகில் தன் கைகளி
லொன்றை வைத்து....
அதுவும்...
நீண்ட நேரம் வைத்
துவிட்டால் என்ன நிகழு
மோ என்ற உணர்வில்...
தட்டித் தட்டி
ஒரு குழந்தையைத் தாலாட்
டுவது போல...!, மோகனின்
கைகள் மென்மேலும் பதுங்கின.

......

எங்கெங்கோ கைகளை
வழிகாட்ட ஏவும் உணர்வு
அவனிடம் உக்கிரமாகிக்
கொண்டிருந்தது.

ஆனால்....

உடலை உராய மறு
க்கும் அவனுடைய விரல்கள்
உள்ளத்தை உராய்ந்துகொ
ண்டிருப்பதை அவன் அவ
தானித்தான்.

இதுவரை இருந்ததை
விட இரட்டிப்பான படிகளைக்
கடந்து உயரத்தில் நிற்
கும் மோகனை அவன் உள்
ளம் கண்டது....

இதுவரையான வாழ்க்
கை காலத்தில் அந்த இரண்டு
மணி நேரங்கள்....!

மறக்கவும் முடியாமல்
நினைக்கவும் தாளாமல்.....

இதயத்தைப் புசித்துக்
கொண்டிருக்கும் அந்த அடி
வயிற்றின் நெருப்புக்கு. நீர்.
வழங்க இந்தக் கிடுகுப்பரப்
புக்களை கைவிரித்துவிடும்

என எண்ணுகிறாள்.

அந்த சிமெந்து இருக்
கைகளின் கீழ் அவனுடைய
இதயம் அகப்பட்டுப் பிழியப்
படுவதான உணர்வு....

ஆம்...!

அந்த இருக்கைகளுக்
குத்தான் எவ்வளவு வலிமை
எத்தனை சரித்திரங்கள்...
எத்தனை இரகசியங்கள்...

.....

ஒரு விரிவுரையாளன்.
அவனே உழைப்பாளிகளின்
உறுதுணையானவன். மேற்
படிப்புக்கு அமெரிக்கா சென்
றபோது......

சிவப்புப் பத்திரிகை
யாளன் தன் விரல்களை மெரு
கேற்றியாக்கி.....

விம்மலின் இடையே
கவிதை தந்த கதையைக்கூட
அந்தப்படிகளே கூறின...

.....

'பரமேஸ்வராக் கல்லூரி'
பல்கலைக்கழகமாகக் கூடாது

என்றவர்கள், அதே பள்
ளிக் கழகத்தைத் தம்பால்
இழுக்க முயன்று தோல்வி
கண்ட முயற்சிகளைப் பற்
றிப் பேசிக்கொண்ட
மாணவர்களின் பட்டிய
லையும் அதே இருக்கைகள்
தான் கூறின...

......

தலைவரிடம் அறிவி
ல்லை, உணர்வு இருட்டுத்
தனமாகவுள்ளது, இராணு
வக் கெட்டித்தனங்கள்,
அரசியல் அறிவுகுறைந்த
படையிடம் நிற்காது,
நிலைக்காது...! பயந்து பின்
செல்பவர்கள் செல்லுங்கள்.
என்றெல்லாம் சிலர் விவா
தித்ததாகவும் அதே இருக்
கைகளே கூறின.

......

'அவன்' தம்பதிகளைக்
கடத்தியவர்களின் பெயர்
கூட அந்த இருக்கைகள்
கூறிவிட்டன.

கலாச்சாரக் கட்டுகளை
அவிழ்த்து விடுவதில் அதிகம் பய
ன்பட்டனவும்...!

அசையாதிருக்கும் அந்த
இருக்கைகளுக்கு மட்டும்
எவ்வளவு அனுபவ அறிவு.

......

இரண்டு கூறுகளாகப்
பிளந்து, கிளைகளோடு சாய்ந்து
அந்த இருக்கைகளின் மேல்
விழுந்து...!

தொங்கிக் கொண்டிருக்
கும் அந்த 'மலைவேம்பம்' மர
த்தின்......

இடையே இருந்த
இரும்பு நரம்புகளிற் துண்டு
துண்டாகத் தொங்கும்
அந்த சிமெந்துத் தசைகள்...

என்ன செய்வது?

இன்றுவரை உன் நிழ
லில் இருந்தோம்...!

இறுதிவரை உன்னைத்
தாங்குவோம் எனத் தாங்கி
நிற்கின்றன.

......

அந்த விருட்சத்தின் சா
யலு எதையோ விளையாடியது.

'செல்'....

தாக்கிச் சரிந்த விரு
ட்சம் சொல்லுவது என்ன?

ஆம்...

அது ஒரு கல்விக்கூட
மல்லவா?

........

மிக வலிமையாக இடி
த்து வளைக்கப்பட்டிருக்கும்
ஒரு 'கேற்' .....!

இதை ஒரு 'டிரக்'
வாகனத்தால் மட்டுமே செய்
திருக்கமுடியும்.

தூண்கள் இரண்டுமே
மதிற் கற்களின் தொடர்பைத்
துண்டித்துக் கொண்டன.

........

யாழ்ப்பாணம்...!

ஆம்!

அந்த அழகிய விதவை
யிடம் எங்கிருந்தோ ஒரு
பாகமாவது வெள்ளைச் சேலை...!

அந்தப் பெயர்ப்பலகை!

யூனிவர்சிற்றி வாசலிற் தொங்
கிக் கொண்டிருக்கும் அந்தக்
கட ......

சல்லடை...!

துப்பாக்கிக் குண்டுகள்
தூவப்பட்ட தடயங்கள்.

........

வரிசையாக அழகு
த்துச் சடைக் குறுகி நாளை
சென்றுக் கருகிவிடும் நிலை
யில் இருக்கும் அந்த 'அசோக'
மரக் கன்றுகள்.

........

இத்தனைக்கும் மத்தியில்
இரண்டொரு காக்கிச் சட்
டைகள் மட்டும்.

காவலாளிகள் 'செட்'
டுக்குள் ஒதுங்கி நின்றன.

அந்த 'செட்'டுக்கும்
முன் கன்றொடி இல்லை.

எந்த வேளையும் வெளி
யே ஓடிவிடலாம் என
அனுமதிக்காத பின்புறக் கதவு
திறந்தே கிடக்கிறது....

(தொடரும்)

## விருட்சத்தை விதையாக்கும் வித்தை

-வைரமுத்து-

வறுமை !
நம் தேசத்தில்
அது
அறிவின் ஆபரணம் !
புலமைக்குக் கிடைக்கும்
முதல் விருது !
என்றும் பசிதான்
கவிதையின் ரத்தம்
வறுமைக்குப்
பசிக்கும் போதெல்லாம்
அது
புலவனைத்தான்
புசிக்கின்றது
புலவனின் கவிதையோ
பசியே வைக்கும் பந்தி
கவிஞன்
மனித ராசி என்றால் -நான்
மறுதலிப்பேன்
அவன்
உயர்திணையை விட
உயர்ந்தவன்
எழுதும் போது
வெளிச்சம்
வேண்டியிருந்தால்
அவனுக்கு
விரலே மெழுகுவர்த்தி

பெருமூச்சையெல்லாம்
அவனை
பேசும் புல்லாங்குழல்
ராக ஜாதியாய்
ரசவாதம் செய்துவிடும்
அவன் கண்ணீர் . . .
இறுகி . . . இறுகி . . .
முத்துக்களாய்
முதிர்ந்து விடும் .
தன்னை
நசுக்கிக் கொண்டு அவன்
சிரித்துக் கொள்வான்
சோகமே
அவனது படுக்கை
கவலையே
அவனது தலையணை !
அவனுக்குத் தெரியும்
விருட்சத்தைச் சுருட்டி
விதையாக்கும் வித்தை .

நன்றி :
'கவிராஜன் கதை'

# வரலாற்றிலிருந்து வாழ்வுக்கு

மு. தில்லைநாதன் -

# டென்மார்க்
## DENMARK

இம்முறை ஒரு வட ஐரோப்பிய நாட்டினை அறிமுகமாக 'டென்மார்க்' பற்றிய தகவல்களில் சேகரிக்கப்பட்டவற்றைத் தருகிறோம்.

வடக்கு ஐரோப்பாவிலான 43069. ச.கி.மீட்டர் பரப்பளவுடையது எனக் கணிக்கப்பட்டுள்ள இந்நாட்டினது மொத்த மக்கள் தொகை 5112000 க்கு அண்ணளவானது.

மத்திய ஐரோப்பாவுக்கும், ஸ்காண்டிநேவியாவுக்கும் இடையேயுள்ள தீவாகவே இந்நாடு காணப்படுகிறது.

406 தீவுகளை உள்ளடக்கிய ஒரு தீவுக்கூட்டமான இந்நாட்டில் மக்கள் வாழும் தீவுகள் 92 மட்டுமே.

இங்கு வாழும் மக்களில் ......

96.5, டெனிஸ் இனத்தவர்.

1.4, ஜேர்மனியர்,

.6. சுவீடன்காரர்,

1.5. ஏனைய நாட்டவர்

அடங்கிவர்.

இந்நாட்டின் 84% மான மக்கள் நகர்வாசிகளாகவே காணப்படுகின்றனர்.

'கோப்பன்ஹாகன்' நகரத்தில் மட்டும் நாட்டின் 27% மான ஜனத்தொகை வாழ்கின்றது. வாழுகின்ற மக்கள் தொகை அண்ணளவாக 633000 ஆகும்.

இந்நாட்டின் தலைநகரும். 'கோப்பன்ஹாகன்' நகரேயாகும்.

இந்நகரைச் சூழவுள்ள பகுதிகளில் வாழும் மக்களையும் கணக்கிற்கொள்ளவேண்டின் 13.7 இலட்சம் மக்கள் இந்நகர் சார்ந்து வாழ்கின்றனர்.

இந்நாட்டின் மொழியாக 'டெனிஸ்' வழங்கி வருகின்றது. இதுவே அரசகரும மொழியுமாகும்.

பெரும்பான்மை மக்கள் தழுவுகின்ற மதம் 'புரொட்டஸ்தாந்து' வேதம் ஆகும். இருந்தபோதும் கத்தோலிக்கர்களும், யூதர்களும் சிறுபான்மையாக உள்ளனர்.

இந்நாட்டின் தேசிய விருத்தித்தினம்....

ஏப்ரல் 16ம் திகதி ஆகும்.

இத்தினமே இந்நாட்டு மகாராணியின் பிறந்ததினமுமாகும்.

'டென்மார்க்' முடியாட்சியுடன் கூடிய இரு ஜனநாயக பாராளுமன்ற முறையைத் தழுவியுள்ளது.

இந்நாட்டின் தலைமை வகிப்பவர்.

'ராணி மார்கிறெத் - II'

வயது - 46

இவருடைய தந்தையாரான 'பிரெடரிக் - IX' அவர்கள் காலமானதைத்

தொடர்ந்து... 14-1-72 ல் ராணியார் சிம்மாசனத்தை ஏற்றுக்கொண்டார்.

அரசவைத்தலைவராக பௌல் - ஷ் லூற்றர். (POUL - SCHLÜTER) கடமையாற்றுகிறார்.

ஐ. நா. சபை (U.N.O)
ஐ. பொ. ச. (E.G)
NATO

ஆகியவற்றில் இந்நாடும் அங்கத்துவம் பெற்றுள்ளது.

ஏற்றுமதிப் பொருளாதாரமே இந்நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது.

இறைச்சி, பாற்பொருட்கள், இயந்திரவகைகள், புடவைப் பொருட்கள், வைத்தியப் பொருட்கள், தளபாடவகைகள், மீன்வகை ஆகியன. விவசாய உற்பத்திப் பொருட்களில் 28% மானவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இப்பொருட்களின் இறக்குமதியாளர்கள் ஐரோப்பிய சந்தைக்கான நாட்டவர்களே!

நாணயம் :-
'டெனிஷ்குரோன்'

1. D. Krone (dkr) 100 øre
1. dkr = 0.2696. DM.
1. DM = 3.7095 dkr.

நாட்டிற்குத் தனியான தபால்தலைகளும் உண்டு

* * *

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்,
நற்றவ வானினும் நனி சிறந்தனவே...."

# வாழ்த்துக் கீதங்கள்...

## வாசகர் கடிதம்

தினமும் தபால்காரனைத் தொடர்ந்து ஏமாற்றம் என்னைப் பற்றிக்கொள்கிறது. இம்மாதம் மட்டும் 'அருவை' ஏன் இதைச் செய்கிறது ..... தயவு செய்து மேலும் தாமதம் வேண்டாம்.

திரு. ஏ. வசந்தன், ஜேர்மனி.

ஆரம்பம் முதல் இன்றுவரை 'அருவை'யின் ரசிகர்களில் நானும் ஒருவன். 'பொழியாது கழிந்தவை' நவீனம் தொடரட்டும் .....

திரு. நமசிவாயம், நோர்வே.

இலக்கியத்துக்காகப் பேனாவுக்கு மைவிடுங்கள் எவனாவது ஒருவனென்றாலும் வாசிக்க வருவான். எழுதியது என்றுமே அழியாது தொடரட்டும் எமது பணி .....

திரு. கோவிந்தகுமார், ஜேர்மனி.

சகோதரனே! நல்லதொரு பணியிலீடுபடும் இப்பத்திரிகைக்கு 'அருவை' என்ற பெயர் பொருத்தமானதுதானா? அப்படியெனில் விடுங்கள். அல்லது அதன் பெயரை மாற்றுவதற்காக வாசகர் அபிப்பிராயம் ஒன்றைக்கோரவும்.

திருமதி. லோகா. சார்ள்ஸ். ஜேர்ம

எழுதுங்கள்

# மண்வாசனை

சிறுநீர் தப்பிப், புழுதி அளைந்து....
தெருவழி வாசகாய் ஓடி வளர்ந்த
அருமை மண்ணை அந்நியமாகுமோ?
அந்த நாட்களை மறந்திடக் கூடுமோ?

---

இவ்விதழ் மலரும் எழுத்தோவியமாக 'எழுவைதீவு' எனும் சிறு தீவகத்தைத் தருகிறோம்.

# எழுவைதீவு

ஊர்காவற்றுறையின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் நின்று பார்க்கும் போது கடலுக்கு மேற்கே தெரியும் சிறுதரை உயர்ச்சியாக அமைந்துக்காணப்படுவது 'எழுவை தீவாகும்.

'ஊர்காவற்றுறை'யின் துறைமுகத்திலிருந்து சுமார் 03 மைல்கள் தொலைவிலுள்ளது இத்தீவாகும்.

யாழ்குடாநாட்டில் வாழும் கணிசமான மக்கட் தொகைக்கே இத்தீவு தெரியாதிருக்கலாம்.

'எழுவைதீவு'க்குப் பயணமாகும் போது....

'காரைநகர்', 'ஊர்காவற்றுறை', 'எழுவைதீவு' ஆகிய இடங்களுக்கு மத்தியில்

கடற்கரையில் பிறந்துகொண்டிருப்பதுபோலக் காட்சிதரும் ஒரு சிறிய 'கடற்கோட்டை' எனும் கற்கோட்டையைச் சந்தித்தே செல்கிறீர்கள்.

இது ஒல்லாந்தர் ஆட்சியின் போது அமைக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது.

ஏழு தீவுகள் அடங்கியதான தீவுப்பகுதியின் மையத்திடலாக இத்தீவு அமைந்திருந்த காரணத்தால் இதனை 'ஏழுமையத்தீவு' என வழங்கினர் எனவும். அப்பெயர் வழக்கு மருவி 'எழுவைதீவு' ஆனது எனவும் கூறப்படுகின்றது.

ஆதியில் 'பூதத்தீவு' எனும் பெயராலும் அழைக்கப்பட்டது என்பதும் வரலாறு.

பலவகையான குடிசைக் கைத்தொழில், மீன்பிடி, விவசாயம் போன்ற தொழிற்துறைகளோடு தொடர்புடைய மக்களே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

'பனை' மரம் நெருக்கம் கூடிய பிரதேசங்களில் இலங்கையில் இரண்டாவது இடத்தினைப் பெறுவது இத்தீவேயாகும்.

போர்த்துக்கேயர் காலத்தில் இதனை 'ரிகா டெசேர்ற்' (TIHA DESERTA) எனவும் அழைத்ததுண்டு.

குடாநாடு முழுவதும், ஏன் வன்னிப்பிரதேசம் வரை 'எழுவைதீவின்' பனம்பொருள் உற்பத்திகள் நல்ல மதிப்புப் பெறுகின்றன.

கரையோரப் பகுதிகள் அழகிய நெடிய தென்னைகளாற் சூழ அலங்கரிக்கப்பட்டும், மத்திய பகுதியில் நெல், புகையிலை புலங்களாக எல்லா வகைக் கறிவகைகளும் செய்கை பண்ணப்படுகின்றது.

இத்தீவின் மத்தியிலே

ஒரு முருகன் ஆலயமும், தெற் குப்பகுதியில் 'மாதா' கோவிலும் உள்ளன.

கல்வி வாய்ப்புகளுக் கென ஒரு கிறிஸ்தவ பாட சாலையும், மகாவித்தியாலயம் ஒன்றும் உள்ளன. இப்பாட சாலைகளில் 8ம் தரம் வரை

'கிண்டுத்துறை' என அழைப்ப துண்டு.

சில அடிகள் மட்டும் ஆழமுள்ள கிடங்குகளைக் கைகளாலேயே தோண்டி ஆழப் படுத்தும் போது சுத்தமான நன்னீர் பளிங்குபோலச் சுரப் பதே ஒரு மனநிறைவு தரும்.

# ஜொயீஸ் சபேசன்

கல்வி வகுப்புக்கள் நடை பெறுகின்றன. மேற்படிப்பு க்கென மாணவர்கள் தீவுக்கு வெளியேயே செல்கின்றனர்.

மாரிகாலங்களில் தீவின் எல்லாப்பாகங்களிலும் காணப் படுகின்ற நன்னீர் கோடை காலத்தில் தீவின் மையப்பகு தியில் மட்டுமே காணப்படுகி றது.

அன்னக்கற் பாறைக ளைக் கொண்ட கடற்கரைப் பகுதியில் காணப்படும் இரச் சினைகளை இத்தீவின் மக்கள்

இப்படியான சூழ்நிலை யை ரசித்துக்கொண்டும், தம் மை அந்த வாழ்வுக்கு இசை வாக்கிக்கொண்டும். நூற்று க்கு மேலான குடும்பங்கள் அங்கு வாழ்கின்றனர்.

அவ்வூருக்கெனக் கிரா மாட்சி மன்று, வைத்தியசாலை, சனசமூகநிலையம் என்பனவும் உள்ளன.

மற்றும் உதவி அர சாங்க அதிபர் பணிமனை, பொலிஸ் நிலையம், இந்து மன்றம் போன்ற நிலையங்

சேவைகள் யாவும் உனக்கா வந்துறையுடனேயே இணைக்கப்பட்டுள்ளது.

இருபக்கக் கடல் துறைகளும் காற்றில் ஒரு மிதந்து சங்கமிக்கும் இத் தீவின் சிறிய பரப்பளவான நான்கு சதுர மைல்களைச் சூழவுள்ள கடற்கரையோரமாக சுமார் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் சுற்றிவந்துவிடுவதற்கு சராசரி மனிதன் நடக்கும் வேகமே போதுமானதாகும்.

உயர்ந்த கரையோரம், அடர்ந்த பனங்காடு, வளர்ந்த தென்னஞ்சோலைகள், ஓயாது தாலாட்டும் அலைகள். வங்காள விரிகுடாவிலிருந்து '<u>ஊ</u>' வென்று வீசும் உப்புக் காற்று......

எல்லாம் இணைந்ததான தனித்துவம்.......

எழுவைதீவிற்கு அருகே நிகர். இதன் தென்புறம் நயினை. மேற்புறம் பாரதம். இவைகளைப் பிரிக்கும் இந்துமகடல் வடபுறம் பரந்து செல்ல, தீவு 'வருக வருக' என என்றும் அழைக்கின்றது.

8வது - இதழுக்கான

# கருத்து மோதல்

தனிமனிதன் தன் வாழ்வை நிலைப்படுத்திக் கொள்ள உகந்தது

செல்வந்தநாடுகள் / தாய்நாடு ?

# தமிழ் மணம் கமழும்

திருமணங்களா?
ருதுசாந்திகளா?

# மணவறை,
# தலைநகை.

**BOBY**
**Neuss. 1.**

தொலை பேசி:
02101 - 17846.




[illegible]

[illegible]

# DAGINY
## VIDEO CENTER

தொலைபேசி:
0201 - 629507
0201 - 238999

AMIX STR - 26.
4300. ESSEN.



மணவறை,
வீடியோ படப்பிடிப்பு.

# கே.ரி.எஸ்.

## - வீடியோ -

தொலைபேசி:
02305-85945.

-THIRUCHELVAM-
CASTROP-RAUXEL.